பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 28 வியாழக்கிழமை 12.05.2022 கதிர் 81

## சஜித் - மைத்திரி இரகசியப் பேச்சு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் அவசர கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இவ்விருவரும் நேற்றிரவு தொலைபேசி ஊடாக மந்திராலோசனை ☞2

# செவ்வாயன்று மீள பிரதி சபாநாயகர் தெரிவு; அடுத்து ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை!

### இன்று சபாநாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு

இரண்டாவதுதடவையாகப் பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சித் மத்தும பண்டார தன் பதவியை மீளவும் ராஜினாமாச் செய்துள்ள நிலையில் புதிய பிரதி சபாநாயகரை தெரிவு செய்யும் தேர்தல் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை 17ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போதும் முதல் விடயமாக நடைபெறும்.

அதை அடுத்து ஏற்கனவே ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ளபிரேரணையை விவாதத்துக்கு ☞2

# மஹிந்த, நாமல், ஜோன்ஸ்டன் உட்பட 17 பேருக்கு வெளிநாடு செல்லத் தடை



### கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்று அதிரடி உத்தரவு

கொழும்பு,மே12

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவரின் மகன் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ,முன்னாள்அமைச்சர்ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட பொதுஜன பெரமுன கட்சியின் 17 அரசியல் பிரமுகர்கள் ☞2

## கோட்டாபயவின் கீழ் எப்பதவியும் ஏற்கேன்!



### சரத் பொன்சேகா சூளுரை

தற்போதைய ஜனாதிபதியின் கீழ் அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்கத் தாம் தயாராக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். ☞2

## இன்று மாலை ரணில் பிரதமர் பதவியேற்பு

கொழும்பு,மே12

தனி ஒருவராக - அதுவும் தேசியப்பட்டியல் உறுப்பினராக - நாடாளுமன்றம் சென்ற ரணில் விக்கிரமசிங்க வேறு எந்தக் கட்சியுடனும் ☞2

### சுயாதீனக் குழுவால் பிரதமர் பதவிக்கு

## பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் கோட்டாவுக்கு அனுப்பவில்லை

### -மைத்திரி தெரிவிப்பு



கொழும்பில் நேற்று நடைபெற்ற சுயாதீனக் குழுவினரின் கூட்டத்தில் சுயாதீனக் குழுவால் பிரதமர் பதவிக்காகப் பிரேரிக்கப்பட்டிருந்த பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டவில்லை என்று ஸ்ரீலங்கா ☞2

## இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு - காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது எனத் தொழிற்சங்க ஒன்றிய சம்மேளனம் ☞2




## இனி நாடாளுமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்!

### சஜித்துக்கு கோட்டா பதில்

“உங்களைப் பதவியேற்க வரும்படி அழைத்து இரண்டு நாள்கள் காத்திருந்தேன். நீங்கள் வரவில்லை. அதனால் அந்த வாய்ப்பை - அரசமைக்கும் சந்தர்ப்பத்தை - ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு முடிவு எடுத்து அவருக்கும் அறிவித்து விட்டேன். இனி நீங்கள் விடயத்தை ☞2

## பிரதமர் பதவியை ஏற்பதற்கு தயார் என்று சஜித் அறிவிப்பு

சில நிபந்தனைகளின் அடிப்படையில் இடைக்கால அரசின் பிரதமர் பதவியை ஏற்பதற்குத் தாம் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கடிதம் மூலம் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்திருக்கிறார். ஒரு குறிக்கப்பட்ட காலகட்டத்துக்குள்நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி ☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



### மஹிந்த, நாமல் .......

நாட்டை விட்டு வெளியே செல்வதற்கு தடை விதிக்கும் இடைக்கால தடை உத்தரவு ஒன்றை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று அதிரடியாக வழங்கியுள்ளது.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராகவும் இதேபோன்ற தடை உத்தரவு ஒன்று விதிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் அமைதியாக - ஜனநாயக வழியில் - போராடிய பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் மேற்கொண்ட குரூரமான வன்முறைத் தாக்குதலை ஒட்டியே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது.

சட்டமா அதிபரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துக்கு ஆதரவாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், பாதிக்கப்பட்ட தரப்புகளும் முன்னிலையாகி ஆதரவு தெரிவித்த நிலையில் இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியிருக்கின்றது.

மேற்படி வன்முறைத் தாக்குதலை அடுத்தே நாடளாவிய ரீதியில் பெரும் கலவரங்கள் வெடித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பவித்ரா வன்னியாராய்ச்சி, சி.பி.இரத்தினாயக்கா, சனத் நிஷாந்த, சஞ்சீவ எதிர்மன்ன ஆகியோரும் இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

### சுயாதீனக் .......

சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற சுயாதீனக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, டலஸ் அழகப்பெரும மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களைப் பிரதமராக ஜனாதிபதியிடம் முன்மொழிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெயர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏலவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### செவ்வாயன்று .......

எடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ளது. அதனை நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற வடிவத்தில் எடுப்பதற்கு சபாநாயகர் மறுத்துவிட்டார். ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி வெளியிடும் பிரேரணையாக அதன் வாசகங்களை மாற்றினால் அதனைச் சபையில் எடுப்பதற்கு அனுமதிக்க முடியும் என்று சபாநாயகர் ஏற்கனவே தம் முடிவை அறிவித்து இருக்கின்றார் என்பது தெரிந்ததே.

அதன்படி வாசகங்களை மாற்றி அதனை உடனடியாக நாடாளுமன்றில் வாதத்துக்கு எடுக்க எதிர்க்கட்சிகள் கேட்டுக்கொண்டுள்ளன. எனினும் இத்தகைய பிரேரணை ஏதும் சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து நாடாளுமன்ற அமர்வு நாள்கள் பூர்த்தியான பின்னரே அதனை சபையில் விவாதத்துக்கு எடுக்க முடியும் என்பது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை விதியாகும். ஆகவே, இப் பிரேரணையை 17 ஆம் திகதி சபையில் எடுப்பதாயின், அதற்காக நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணை ஒன்று அதற்கு முன் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதை எதிரணி செய்வதற்கு அனுமதிக்க இன்றைய கூட்டத்தில் சபாநாயகர் இணக்கம்தெரிவித்தார்.

இதன்படி, 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் நாடாளுமன்றம் கூடியதும் முதலில் பிரதி சபாநாயகர் தேர்வு நடைபெறும். அதைத்தொடர்ந்து நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணை ஒன்றை எதிரணி சமர்ப்பிக்கும். அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி தெரிவிக்கும் பிரேரணை சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன

### கோட்டாபயவின் .......

பிரதமர் பதவியை வழங்குவதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பு கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே தனது உத்தியோகபூர்வ முகநூல் கணக்கின் பதிவில் சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் -

பொய்ப் பிரசாரத்தின் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் எந்தவொரு முயற்சியையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்க நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

அமைதியான, வன்முறையற்ற உள்நாட்டுப் போராட்டத்தின் மூலம் முழு இலங்கை தேசத்தின் முக்கிய கோரிக்கைகளில் நானும் நிபந்தனையின்றி நிற்கிறேன்.

காலி முகத்திடல் போராட்ட மைதானத்தில் இருந்து நாட்டிற்காகவும், மக்களுக்காகவும், தேசத்தின் பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் குரல் கொடுக்கும் மக்களின் கோரிக்கைகளை நான் மிகவும் உணர்கின்றேன்.

ஆரம்பத்தில் இருந்தே, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் துணிச்சலான போராளிக் குடிமக்களின் குழந்தைகளுக்கு நான் முழு மனதுடன் ஆசீர்வதித்தேன்.

காலி முகத்திடலில் போராடுபவர்களுடன் கலந்துரையாடாமல் ராஜபக்ஷ நெருக்கடியை தீர்ப்பதில் நான் ஒரு பகுதியாக இருந்ததில்லை - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### இலங்கை ஆசிரியர்.......

நேற்று அறிவித்தது. எனினும், குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னதாக, அதன் பிரதிநிதிகள் தமது சங்கத்தினருடன் எவ்வித கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இன்று தெரிவித்தார். எனவே, தமது சங்கத்தால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### பிரதமர் பதவியை.......

முறை ஒழிக்கப்பட்டு, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசமைப்பின் 19ஆவது திருத்த ஏற்பாடுகள் மீள நடைமுறைப் படுத்தப்பட்டு, வரையறுக்கப்பட்ட ஒரு காலத்துக்கும் ஜனாதிபதி தம் பதவியில் இருந்து விலகுவார் என்றால் பிரதமராக பதவியேற்று, இடைக்கால அரசு ஒன்றை நாளைக்கும் நிறுவுவதற்கு நான் தயார் என்று அந்த கடிதத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார்

உங்களுடன்(ஜனாதிபதியுடன்) பேச்சு நடத்தி, மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு தாம் தயார் என்றும் அந்த கடிதத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். தமது கட்சியினரும், மகாநாயக்கர்களும், பிறதரப்பினரும் வழங்கிய ஆலோசனை அழுத்தத்தின் பேரில் தாம் இந்தத் தீர்மானத்துக்கு வந்திருக்கின்றார் என்றார் அவர்.

### இன்று மாலை.......

கூட்டு அமைக்காமல் இன்று இலங்கையின் புதிய பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கிறார்.

இன்று மாலை 6.30 மணி அளவில் நடைபெறும் சத்தியப்பிரமாண வைபவத்தை அடுத்து அவர் கொழும்பு கங்காராம விகாரையில் விசேட வழிபாடுகளில் பங்குபற்றுவார் எனத் தெரிகின்றது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை ஒரிரு தினங்களில் பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சஜித்-மைத்திரி .......

நடத்தியுள்ளனர். இடைக்கால அரசு, புதிய பிரதமர் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

சஜித் பிரதமரானால், அவருக்கு ஆதரவு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இனி நாடாளுமன்றத்தில்.......

நாடாளுமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள். நாடாளுமன்றத்தில் உங்கள் பெரும்பான்மையை காட்டுவதன் மூலம் நீங்கள் அரசு அமைக்க முனைவதே இனி உங்களுக்கு உள்ள வாய்ப்பு.'' - இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பகல் தொலைபேசி மூலம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்குத் தெரியப்படுத்தினார் என அரசியல் வட்டாரங்களில் கூறப்பட்டது.

தாம் பிரதமர் பதவி ஏற்கத் தயார் என்று தெரிவிக்கும் கடிதம் ஒன்றை சஜித் பிரேமதாஸ இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தபின்னணியிலேயே இந்தப் பதிலை தொலைபேசி மூலம் ஜனாதிபதி தெரியப்படுத்துனார் எனக் கூறப்பட்டது

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் இன்று ஆரம்பமான நிலையில்பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக மாணவர்கள் மற்றும் ஊழியர்களால் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தூங்காத நீதி

அதிகாரப் பதவி நிலைகளை வைத்துக்கொண்டு அரசியல் தில்லுமுல்லுகள், பித்தலாட்டங்கள் நடத்திய அரசியல்வாதிகள் இப்போது அவற்றையும் தாண்டி வன்முறை அராஜகங்களையும் சர்வசாதாரணமாகக் கட்டவிழ்த்துவிடும் கைங்கரியத்தையும் தாராளமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த அரசியல் அராஜகங்களுக்கு எதிரான மக்களின் அறச்சீற்றம் இப்போது நாடளாவிய ரீதியில் கிளர்ந்திருக்கின்றது.

முள்ளை முள்ளால் எடுப்பது போல மக்களும் தங்கள் சீற்றத்தை அதே வன்முறை பாணியில் வெளிப்படுத்த முயன்றமையால் கடந்த இரண்டு, மூன்று நாள்களாகத் தென்னிலங்கையில் பல இடங்களும் பற்றி எரிந்தன.

இந்த கட்டத்தில் இந்த நெருக்கடிக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதில் இரண்டு துறைகள் – தரப்புக்கள் – தீர்மானித்துச் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அரசியல்வாதிகளின் அராஜகங்களுக்கு எதிரான மக்கள் சீற்றத்தை – சட்டத்தையும், ஒழுங்கையும் கையிலெடுத்த மக்களின் கோபத்தை – கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் களத்தில் இறக்கப்பட்டு இருக்கின்றனர். விவகாரம் இராணுவ மயப்படுத்தப்பட்டாலும் ஏதோ ஒரு கட்டத்தில் இத்தகைய போக்குகள் நிறுத்தப்படவேண்டும் என்பதால், இதைத் தவிர மாற்றுவழி – வேறு மார்க்கம் – இல்லை என்ற பின்புலத்தில் அதற்கு விருப்பின்றியே தலையை சைத்துப் பார்த்திருக்கும் நிலைமைதான் சமூக ஆர்வலர்களுக்கு.

அதே நேரம் இத்தகைய அரசியல்வாதிகளின் அராஜகங்களை நீதித்துறையும் கண்மூடித்தனமாக பார்த்துக் கொண்டு வாளாவிருக்காது என்ற செய்தியை நீதித்துறையும் பிரதிபலித்து இருக்கின்றது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள், பிரமுகர்கள் 13 பேர் மற்றும் கொழும்பு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு எதிராக நாட்டை விட்டு வெளியேற முடியாத தடை உத்தரவை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்திருப்பதன் மூலம் வலுவான செய்தி நமது அரசியல் தலைமைத்துவங்களுக்கு உரைக்கப்பட்டிருப்பதாகவே கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் பின்னணியிலிருந்து வன்முறைகளைத் தூண்டி விட்டு இலகுவாக தப்பிக்கொள்ள முடியாது என்பது இப்போது கோடி காட்டப்பட்டிருக்கிறது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி, சி.பி.ரத்நாயக்க, சனத் நிஷாந்த சஞ்சீவ எதிர்மன்ன உட்பட்ட 13 பேருக்கு எதிராக வழங்கப்பட்ட இந்தத் தடை உத்தரவு இறுதி தீர்ப்பல்ல. வெறும் இடைக்காலத் தடை உத்தரவு மட்டுமே.

எனினும், காலிமுகத்திடலில் ஜனநாயக வழியில், அமைதியாகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக அராஜக அட்டூழியம் நடத்தி, வன்முறைத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்ட கொடூரங்களுக்கு இன்னும் கூட மன வருத்தமோ, மன்னிப்போ தெரிவிக்காத தரப்புகள் இப்போது சரியான பாடத்தை சட்டத்தின் மூலம் படிக்கும் நிலைமை வந்திருக்கின்றது.

சரியோ பிழையோ அலரிமாளிகையில் மஹிந்த ராஜபக்ஷவும், மேற்படி தரப்பினரும் நடத்திய கூட்டத்தில் பங்குபற்றிய பின்னர் அங்கிருந்து வெளியேறிய கும்பலே இந்தக் கொடூர தாக்குதலை நடத்தி அதன் மூலம் நாடு முழுவதும் வன்முறை தலைவிரித்தாடும் மோசமான நிலைமையை உருவாக்கியது என்பது கண்கூடு.

அந்தக் குண்டர்களை மஹிந்த தரப்பினர்தான் நேரடியாக ஏவி விட்டனரா, இல்லையா என்பது வேறு விடயம். ஆனால் தங்களுடைய கூட்டத்தில் பங்குபற்றி முடித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டவர்கள் நேரடியாக இந்த அடாவடித்தனத்தைச் செய்தனர் என்ற அடிப்படையிலாவது விடயங்களுக்கு தார்மீகப் பொறுப்பேற்று, மன்னிப்புக் கோரி, மன வருத்தம் தெரிவிக்கும் அரசியல் நாகரிகமும் மனிதப் பண்பியல்பும் இல்லாதவர்களை, நீதிமன்றமும் அதே போக்கில்தான் கையாளும், கவனிக்கும். அது தவிர்க்க முடியாததுதான்.

# துப்பாக்கிச் சூடு நடத்தலாம்; உத்தரவு சட்டவிரோதமானது

## சுமந்திரன் காட்டம்



சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது முப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்கிற உத்தரவு சட்டவிரோதமானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொது சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக தனது டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்த எம் .ஏ. சுமந்திரன், அரசமைப்பின் 52(3) பிரிவின்படி அமைச்சரவை கலைக்கப்படும் போது அனைத்து அமைச்சின் செயலாளர்களும் பதவி வகிப்பதை நிறுத்துவார்கள். அந்த வகையில் பொது சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டதாகக்கூறப்படும் அனுமதி சட்டவிரோத உத்தரவு. - என்றார்.

# வழமைக்கு திரும்பியது எரிபொருள் விநியோகம்

நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று(புதன்கிழமை) பிற்பகல் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபன தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சாந்த சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக பாதுகாப்பு கருதி கடந்த திங்கட்கிழமை முதல் எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டா கோ கமவில் அமைதி நிலை எந்தப் பிரச்சினைகளும் இல்லையாம்!

## இராணுவத் தளபதி கூறுகிறார்



காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து வெளியேறும் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

கோட்ட கோ கமவில் மக்கள் அமைதியாக இருக்கும் வரையில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# சகல இனத்தவரும் இணைந்தாலே இந்தப் போராட்டம் வெற்றியடையும்

## விமலசார தேரர் அழைப்பு



இந்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கில் வசிக்கும் மூவினத்தவரும் ஒற்றுமையாக இருப்போம் என வடக்கு முதன்மை சங்கநாயக்க தேரர் பூஜ்ய சியம்பலா கஸ்வெள விமலசார தேரர் தெரிவித்தார். நாட்டு நிலைமை தொடர்பாக நேற்று (புதன்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அரசுக்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் ஒரு மாதத்துக்கும் மேலாக அஹிம்சை ரீதியான போராட்டம் இடம்பெற்று வந்தது. அதனைப் பொருட்படுத்தாத அரசாங்க ஆதரவாளர்கள் அவர்களைத் தாக்கி அவர்களது போராட்டத்தைக் குழப்பியமையாலேயே நாட்டில் இந்த சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த சூழ்நிலையில் எங்களுக்குள் இன மத மொழி பேதம் பார்த்தால் போராட்டத்தின் நோக்கமே தடம் மாறிபோய்விடும். எனவே அதற்கு இடம் கொடுக்காமல் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்தாலே இந்தப் போராட்டம் வெற்றியடையும்.

எனவே வடக்கு கிழக்கில் வசிக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் இப்படி யான சூழ்நிலையில் ஒற்று மையாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். – என்றார்.

## அமெரிக்க நாட்டின்

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ 20 வீடுகள் எரிந்து நாசம்




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பணக்கார நகரமான லகுனாநீக்குவேல் பற்றி எரியும் காட்டுத்தீ குடியிருப்புகளுக்கும் பரவியதில் 20 வீடுகள் சேதமடைந்தன. தெற்கு கலிபோர்னியாவில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் பற்றிய தீ, காட்டின் முகப்பில் இருந்த வீடுகளுக்கு பரவியுள்ளது. நேற்று பிற்பகலில் பலத்த காற்று வீசியதால் குடியிருப்புகளுக்கு தீ பரவியதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பல மில்லியன் டொலர் மதிப்பிலான வீடுகள் தீபற்றி எரியும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவிவருகின்றன. இந்த தி விபத்தின் காரணாமாக குடியிருப்பு பகுதி மக்கள் ஒரே நேரத்தில் வெளியேற முயற்சித்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனிடையே ஹெலிக்கொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள லகுனா நீக்குவேல் சுமார் 65,000 மக்கள் வசிக்கும் மலை உச்சி நகரமாகும். கடல் ஓரத்திலும் அமைந்துள்ளது. எனவே லாஸ் ஏஞ்சல்ஸுக்கு தெற்கே சுமார் 80 கி.மீ. தூரத்தில் உள்ள லகுனாநீக்குவேல் நகரம் சிறந்த சுற்றுலா தளமாகும். இதுவரை அங்கு வேறு எந்த பெரிய தீவிபத்துகளும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சீனாவின் சாங்கிங் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட திபெத் ஏர்லைன்ஸ் விமானம் தீப்பிடித்தது

### பயணிகள் உள்பட 122 பேர் உயிர் தப்பினர்



சீனாவின் சாங்கிங் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட திபெத் ஏர்லைன்ஸ் விமானம் தீப்பிடித்து எரிந்தது. இதில் பயணிகள் உள்பட 122 பேர் உயிர் தப்பினர். விமானம் புறப்பட்டபோது ஓடுபாதையில் இருந்து விலகியதால் தீப்பிடித்ததாக முதற்கட்ட விசரணையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய படைகளை விரட்டும் உக்ரைன் அமெரிக்கா ரூ.3.08 லட்சம் கோடி உதவி

உக்ரைனின் கார்கிவ் பகுதியில் உள்ள 4 கிராமங்களில் ரஷ்ய ராணுவத்தை விரட்டி அடித்து உக்ரைன் படை கைப்பற்றி உள்ளது. உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் கடந்த பெப்ரவரி 24ம் திகதி தொடங்கி, 77வது நாளாக நீடிக்கிறது. படை பலத்தில் ரஷ்யா பெரியதாக இருந்த போதிலும், போர் உத்தி, ஆயுதங்களை வீணாக்காமல் பயன் படுத்துவது உள்ளிட்டவற்றில் சிறியளவிலான உக்ரைனின் ஆதிக்கமே மேலோங்கி இருப்பதாக பல்வேறு நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

இதனை நிரூபிக்கும் வகையில், ரஷ்யா மரியுபோல் நகரம் முழுவதையும் கைப்பற்றிய போதிலும், அசோவ்ஸ்டலில் உள்ள இரும்பு ஆலையை மட்டும் உக்ரைன் ராணுவம் விட்டு கொடுக்கவில்லை. தங்களது இறுதி மூச்சு இருக்கும் வரை போராடுவதாக கூறி உள்ளது. இதனால், மரியுபோல் நகர் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு கீழ் கொண்டு வரும் ரஷ்யாவின் எண்ணம் தகர்ந்துள்ளது. இந்நிலையில், கார்கிவ் பகுதியில் ரஷ்ய ராணுவத்தின் பிடியில் இருந்த 4 கிராமங்களை உக்ரைன் ராணுவம் போரிட்டு மீண்டும் கைப்பற்றி உள்ளது.

இது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், 'கார்கிவ் பகுதியில் ரஷ்ய ராணுவத்தின் பிடியில் இருந்த 4 கிராமங்களை உக்ரைன் படையினர் மீட்டுள்ளனர். இது போல், உக்ரைன் படைகள் முன்னோக்கி சென்றால், ரஷ்ய படையினர் 11 வாரங்களுக்கு முன்பு இருந்த எல்லைக்கு சென்று விடுவார்கள்,' என்று தெரிவித்தார்.

இந்நிலையில், மேற்கு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை சீர்குலைக்கும் வகையில் துறைமுக நகரான ஒடேசாவின் முக்கிய துறைமுகத்தை ரஷ்யா தாக்கி வருவதாக உக்ரைன் அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.


இந்நிலையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை தகர்க்க உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்கள், நிதி உதவி அளித்து வருகிறது. இதன் அடுத்த கட்டமாக, உக்ரைனுக்கு 3.08 லட்சம் கோடி வழங்கும் அதிபர் பைடனின் வேண்டுகோளுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன், ரஷ்யா போர் தொடங்கிய பின்னர், 48 லட்சம் உக்ரைனியர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர் என ஐ.நா. அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த போரில் ரஷ்யா இதுவரை 2,154 ஏவுகணை தாக்குதல் நடத்தி இருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி–யாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் உள்ள நோவோபஸ்கோவ் நிலையத்தில் இருந்து ரஷ்யா ஏற்றுமதி செய்யும் இயற்கை எரிவாயுவை நிறுத்த போவதாக உக் ரைன் தெரிவித்துள்ளது. உக்ரைன் வழியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யா ஏற்றுமதி செய்யும் இயற்கை எரிவாயு தொகுப்பில், 4ல் மூன்று பங்கை நோவோபஸ்கோவ் மையம் கையாண்டு வருகிறது.





## பிரதமர் பொஸ் ஷெரிப்பை சந்தித்தார் நவாஸ்

பாகிஸ்தான் பிரதமர் பொஸ் ஷெரிப் அவரது சகோதரரான நவாஸ் ஷெரிப் உடன் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியை சேர்ந்த முக்கிய தலைவர்களும் சந்திப்பு நடத்தினர். 2019ம் ஆண்டில் ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட நவாஸ் ஷெரிப் லண்டலின் வசித்து வருகிறார்.

## வடகொரியாவில் 2 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக ஒருவருக்கு கொரோனா

### அதிபர் கிம் ஜாங் உன் கடும் உத்தரவு

வடகொரியா நாட்டில் முதன்முறையாக ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. வடகொரியாவில் இதுவரை யாருக்கும் கொரோனா பாதிக்காத சூழலில் தற்போது ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. முதல் கொரோனா தொற்று பாதிப்பால் வடகொரியாவில் எல்லையை கண்காணிக்க அதிபர் கிம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகம் முழுவதும் கொரோனா தீவிரமாக பரவிய நிலையில், வடகொரியாவில் யாருக்கும் கொரோனா இல்லை என அந்நாட்டு அரசு தெரிவித்திருந்தது. குறிப்பாக வடகொரியாவில் உள்ள 2.5 கோடி மக்களில் யாருக்கும் தடுப்பூசி போடவில்லை என்றுகூறப்படுகிறது. உண்மையில் வடகொரியா அரசு சீனா, ரஷ்யா மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் தடுப்பூசி சலுகைகளை நிராகரித்துள்ளது.

இந்நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு வட கொரியாவில் முதல் கொரோனா பதிவாகியுள்ளது. இதனால் வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்பாக நாட்டின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி கொரோனா வைரஸ் பரவலை தடுக்க நாடு முழுவதும் 'முழு ஊரடங்கு' அமுல்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குறுகிய காலத்திற்குள் கொரோனாவை அகற்றுவதே குறிக்கோள். அதே சமயம் மக்களின் விழிப்புணர்வின் காரணமாக ஊரடங்கை சமாளித்து கொரோனாவை நாங்கள் நிச்சயமாக வெல்வோம் என்று கிம் ஜாங் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே ஜனவரி 3,2020 முதல் இந்த ஆண்டு மே 11 வரை வட கொரியாவில் யாருக்கும் கொரோனா பாதிப்பு இல்லை என்றும், பூச்சியமாக இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் WHO தகவல் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவையின் முடிவுக்குக் கட்டுப்பட்டவரே ஆளுநர் பேரறிவாளன் வழக்கில் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்!





முன்னாள் பிரதமா ராஜீவ்காந்தி படு கொலை வழக்கிலிருந்து தன்னை விடு தலை செய்யக்கோரி பேரறிவாளனால் தொடரப்பட்ட வழக்கு நேற்று இந்திய உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இந்த விசாரணையில், அரசமைப்பில் மத்திய அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசின் வழக்கறிஞர் வாதங்களை முன் வைத்தார்.

மாநில அரசுகள் தங்களது அதிகார வரம்பிற்குள் வரும் விசாரணை அமைப்புகளின் வழக்குகளில் மட்டுமே முடிவெடுக்கலாம். பேரறிவாளனின் வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பின் கீழ் வருகிறது. இதனால், மாநில அரசு முடிவெடுக்க முடியாது. சட்டப்பிரிவுகள் பொதுவாக இருந்தாலும், எந்த விசாரணை அமைப்பு என்பதைப் பொறுத்தே அதிகாரம் அமையும், என்று இந்திய மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், இந்திய குற்றவியல் சட்டத்தின் 432, மற்றும் 161 ஆகிய பிரிவுகளுக்கிடையே என்ன வேறுபாடுகள் உள்ளன?, என்று கேள்வியெழுப்பியிருந்தனர்.

பேரறிவாளன் வழக்கில், 3 ஆண்டுகளாக ஆளுநர் முடிவெடுக்கவில்லை. ஆளுநர் எந்த விதிகளின் அடிப்படையில் கோப்புகளை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்? அமைச்சரவை முடிவை குடியரசுத்தலைவருக்கு அனுப்ப ஆளுநருக்கு அதிகாரம் உள்ளதா என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

பேரறிவாளன் விடுதலை தொடர்பான வழக்கில் நேரத்தை வீணடிக்கப்படுகிறது. 75 ஆண்டுகளாக இந்திய குற்றவியல் சட்ட வழக்குகளில் ஆளுநர்களின் மன்னிப்புகள் அனைத்தும் அரசமைப்புக்கு முரணானவையா? ஆளுநருக்காக மாநில அரசுதான் வாதிடவேண்டும். ஆளுநருக்காக நீங்கள் ஏன் வாதாடுகிறீர்கள்? அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட்டிருப்பது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு முரணானது.

கடந்தமுறை வழங்கப்பட்ட இரண்டு வாய்ப்புகள் தொடர்பாக மத்திய அரசின் முடிவு என்ன? இந்திய குற்றவியல் வழக்குகளில் முடிவெடுக்க, குடியரசுத் தலைவருக்கு தனி அதிகாரம் உள்ளதா? கொலைக்குற்றவழக்குகளில்தண்டனையைக் குறைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளதா? கொலைக் குற்ற வழக்குகளில் வழக்குகளில் மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என மத்திய அரசு கூறுவதுபோல் இருக்கிறது. அப்படி என்றால் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவர்களின் கருணை மனுக்கள் எல்லாம் என்ன வாகும்?, என்றும் நீதிபதிகள் பல கேள்விகளை எழுப்பி, சட்ட நடைமுறைகளையும் சுட்டிக்காட்டினர்.

மத்திய அரசினால் முன்வைக்கப்பட்ட வாதங்கள் குறித்து தமிழக அரசின் வழக்கறிஞர் தமது தரப்பு வாதங்களை முன்வைக்கும்போது, ஆளுநர் முடிவெடுக்க வேண்டிய விவகாரத்தில் குடியரசுத் தலைவரைத் தலையிட வைப்பது ஏன்?

அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட்டிருப்பது உச்சநீதி மன்ற தீர்ப்புக்கு முரணானது. மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள முதன்மை அதிகாரம் இந்த விவகாரத்தில் பொருந்தாது. சி.ஆர்.பி.சி. என்ற சட்டம் மத்திய அரசுக்கு மட்டுமே அதிகாரத்தை வழங்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலை தமிழகத்தில் நடைபெற்றதால் இந்த விவகாரத்தில் தமிழக அரசுதான் முடிவெடுக்க முடியும். கருணை மனு மீது முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உள்ளது என குற்றவியல் நடைமுறை சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை., என்றும் தமிழக அரசு வாதிட்டுள்ளது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.




## ஒரு லட்சம் ட்ரோன் செலுத்துநர்கள் வருங்காலத்தில் தேவைப்படலாம்

டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய இந்திய மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, தாங்கள் ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானத் துறையை மூன்று திட்டத்தின் கீழ் முன்னோக்கி கொண்டு செல்கிறோம், என்று தெரிவித்திருக்கிறார்.

முதல் திட்டம் கொள்கை சார்ந்தது. கொள்கையை எவ்வளவு வேகமாக செயல்படுத்துகிறோம் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இரண்டாவது திட்டம் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் தொகையை உருவாக்குவது. மூன்றாவது திட்டம் ட்ரோன் துறையில் உள்நாட்டுத் தேவையை உருவாக்குவது. மத்திய அரசின் 12 அமைச்சகங்கள் இதை செயல்படுத்த உள்ளன, என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ட்ரோன் செலுத்துநராகப் பணிபுரிய கல்லூரி பட்டப்படிப்புகள் அவசியமில்லை என்று தெரிவித்த அவர், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால், ட்ரோன் செலுத்துநராகப் பயிற்சி பெறலாம் எனவும். 2-3 மாதங்கள் பயிற்சி பெறும் நபர் ஒருவர் ட்ரோன் விமானியாக வேலை செய்யலாம் எனவும் இதற்கு மாதம் 30,000 ரூபா சம்பளமாகக் கிடைக்கும் எனவும் கூறியிருக்கிறார்.

வரும் ஆண்டுகளில் தங்களுக்கு ஒரு லட்சம் ட்ரோன் செலுத்துநர்கள் தேவை. எனவே இது மிகப் பெரிய வாய்ப்பு. அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## இலங்கை வன்முறையால் பாதுகாப்பை பலப்படுத்த இந்திய உளவுத்துறை தமிழகத்திற்கு எச்சரிக்கை



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் தலைவர்கள் பலரின் வீடுகளுக்கு தீவைக்கப்பட்டு, சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வீடும் எரிக்கப்பட்டது.

இந்த நிலையில், இலங்கையில் வன்முறை வெடித்துள்ளதால் தமிழகத்திற்குள் தேச விரோதிகள் ஊடுருவ வாய்ப்பிருப்பதாகவும், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகக் கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பைப் பலப்படுத்துவதற்கு தமிழக காவல்துறை, இந்தியக் கடலோரக் காவல்படை, கடலோரப் பாதுகாப்புக் குழுமம் போன்றவற்றிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சிறைக் கைதிகள் கொண்டுசெல்லப்பட்ட போது நடத்தப்பட்ட தாக்குதலில் 50க்கும் அதிகமான கைதிகள் தப்பினர் எனவும் தகவல் வெளியான நிலையில், அகதிகளோடு சேர்ந்து தேச விரோதிகளும் தமிழகத்திற்குள் நுழைய வாய்ப்பிருப்பதாக மத்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது.

சந்தேகப்படும்படியான படகுகள் உள்ளே நுழைந்தால் தகவல் தெரிவிக்கும்படி மீனவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கஞ்சா விற்றால் சொத்துக்கள் முடக்கப்படும் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உறுதி!



கஞ்சா மற்றும் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதால், சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் எதிர்கால சந்ததியினருக்கு நேரக்கூடிய பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுவோருக்கு போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது, என்று சட்டசபையில் உரையாற்றிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

இவை தவிர, இக்குற்றங்களில் ஈடுபடுவோர், அவர்களது கூட்டாளிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் இருக்கக்கூடிய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன, என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை ஒழிக்க 256 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. உயர்கல்வித் துறையில் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் போதைத் தடுப்புக் கழகங்கள் அமைக்க ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் சட்டமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி, கல்வி நிறுவனங்கள் இருக்கக்கூடிய 200 மீற்றர் தொலைவிற்குள் போதைப் பொருள்கள் விற்பவர்களுக்கு 3 வருடம் முதல் 10 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கவும், ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரை அபராதம் விதிக்கவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் தடைச் சட்டம், 1985 இல் உரிய திருத்தங்கள் செய்யத் தேவையான கருத்துருக்கள் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன்மீது ஒப்புதல் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆகவே, இந்த அரசு குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை ஒழிக்க இன்னும் கடுமையான நடவடிக்கைகளை வரும் நாள்களில் எடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன், என்றும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது உரை நேரத்தின்போது தெரிவித்திருக்கிறார்.

# சாய்ந்தமருதில் இரவில் துர்நாற்றம் வீசும் பிரச்சினை; காரணத்தைக் கண்டறிந்தது மாநகர சுகாதார பிரிவு!






(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தின் ஒரு பகுதியில் கடந்த சில வாரங்களாக பிந்திய மாலை பொழுதுகளில் இனந்தெரியாத துர்நாற்ற வாசமொன்று வெளிவந்து கொண்டிருப்பதனால் மக்கள் உச்சகட்ட அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக சுகாதார துறையினருக்கும், சாய்ந்தமருது பொலிஸாருக்கும் கிடைத்த மக்களின் முறைப்பாட்டையடுத்து பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஸத் காரியப்பரின் களவிஜயத்தின் மூலம் கல்முனையைநோக்கிசெல்லும்வண்ட்வீதியை ஒட்டிய ஓடையில் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட பரிசோதனையில் விலங்கு கழிவுகள், கோழி கழிவுகள் உட்பட பல்வேறு திண்மக்கழிவுகள் இடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதையொட்டி பிரதேசவாசிகளுடன் உரையாடிய அவர் அடைக்கப்பட்டுள்ள நீர்நிலைக்குள் நான்கு மாடுகள் இறந்துள்ளமையை பிரதேச வாசிகள் மூலமாக அறிந்து கொண்டார். இந்த விடயங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்த தானும் கல்முனை மாநகர சுகாதார பிரிவும் எப்போதும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் நேற்றுக் காலை சந்தேகித்த குறித்த இடங்களில் கல்முனை மாநகர சபை கனரக வாகனங்களின் உதவியுடன் அவர் தலைமையிலான சுகாதர குழுவினர் துப்புரவு பணியில் ஈடுபட்டனர். இதன்போது ஆயிரக்கணக்கான உரப்பைகளில் பொதியிடப்பட்ட மாடு, ஆடு, கோழிகளின் உடற்பாகங்கள் அழுகிய நிலையில் அப்பிரதேசத்தில் புதைந்து கிடந்தமை கண்டறியப்பட்டுள்ளது. தீயிடப்பட்ட மாட்டின் உடல் பாகங்கள் மற்றும் அழுகிய நிலையில் பல விலங்குகளின் பாகங்களும் கண்டெடுக்கப்பட்டன.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரிடாக்டர்எம்.ஜே.கே.எம். அர்ஸத் காரியப்பர், சட்டவிரோத மாடறுப்பு மற்றும் முறைகேடான கழிவகற்றலின் காரணமாகவே இந்தப் பிரச்சினை விஸ்பரூபம் எடுத்துள்ளது. மனிதாபிமானமற்ற முறையில் எவ்வித இறையச்சமுமில்லாது, செயற்பட்டவர்களின் செயலே இது. இவர்களை கண்டறிந்து சட்டநடவடிக்கை எடுக்கத் தான் தயாராக உள்ளார் எனத் தெரிவித்தார்.

மேலும், நீர் ஓடமுடியாதளவில் இந்த நீரோடையில் சல்பீனியா தாவரங்கள் அடைத்துக் கிடக்கின்றன. அதன் அடிப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான விலங்குப் பாகங்கள் அடங்கிய கழிவுகள் தேங்கி உள்ளன. பகல்வேளைகளில் சல்பீனியாக்கள் ஒளித்தொகுப்பை செய்து காபனீரொட்சைட்டை உள்ளீர்த்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இரவில் சல்பீனியாக்கள் சுவாசிப்பதன் மூலம் ஒட்சிசனை உள்ளீர்த்து காபனீரொட்சைட்டை வெளியேற்றுகின்றன. இதனால் பகலில் ஒட்சிசன் செறிவு கூடுதலாகவும், இரவில் குறைவாகவும் இருப்பதனால் ANEROVIC பற்றீறியாக்கள் இரவில் சிறப்பாக தொழிற்பாடுகின்றன. இந்தத் தொழிற்பாட்டினாலேயே இரவில் அதிகம் துர்நாற்றம் வீசுவதாக எண்ணுகிறேன். இரவு நேரத்தில் அழுகிய நிலையில் உள்ள விலங்கு கழிவுகளுடன் ANEROVIC பற்றீறியாக்கள் தொழிற்படுவதனால் ஏற்படும் அழுகிய முட்டை வாசத்தை கொண்ட ஹைட்ரஜன் சல்பைட் வாயு வெளியாகிறது. இந்த வாயுவானது வெப்பநிலை மாற்றம் காரணமாக இரவில் தரையிலிருந்து கடலை நோக்கி காற்றும் வீசும்போது ஊருக்குள் துர்நாற்றமாக வீசுவதாகதான் ஊகிக்கிறார் எனத் தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்கு தீர்வை காணும் நோக்கில் நீர்ப்பாசன திணைக்களம், பொலிஸார், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை போன்ற நிறுவனங்களுடன் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளார் எனவும் தெரிவித்தார். இந்த களப்பணியில்கல்முனைமாநகரசுகாதாரப்பிரிவின் தவிசாளரும், மாந கர சபை உறுப்பினருமான சட்டத்தரணி ரோன் அக்தர், மாநகர சுகாதாரப்பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி யூ.எல்.எம். இசாக், சுகாதார மேற்பார்வையாளர் அத்ஹம் , சுகாதார ஊழியர்கள், வாகன சாரதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மாஸ்டர் சிவலிங்கம் நேற்றுக் காலமானார்



(கல்லடி நிருபர்)

இலங்கையின் சிறுவர்களுக்கு உணர்வு பூர்வமாகக் கதைகளைக் கூறி அவர்களை மகிழ்வூட்டும் தன்மை கொண்டவரும், மட்டக்களப்பின் கலைப் பொக்கிஷமாகவும் கருதப்பட்ட கதை மாமணி மாஸ்டர் சிவலிங்கம் நேற்றுக் காலமானார்.

மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த இவர், கலைஞராகவும், எழுத்தாளராகவும், தனது வாழ்நாளின் பெரும்பகுதியை மக்களை மகிழ்வூட்டுவதற்காகவே செயற்பட்டார். இவர் கதை கூறும் பொழுது அந்தப் பாத்திரமாகவே மாறி உரையாடுவதும், அவ்வப்போது நகைச்சுவைச் சிதறல்களை அள்ளி வீசுவதும் அவருக்கே உரித்தான விஷேட பண்பாகும்.

தமிழ்ப் பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகத்தின் கீழ் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் நீண்ட காலம் பணியாற்றியவர். அவரது எழுத்தில் சிறுவர் சிந்தாமணி பகுதி வரவேற்புப் பெற்றிருந்த ஒரு காலம் இருந்தது. சிறந்த வானொலிக் கலைஞராகவும், வில்லிசை விற்பன்னராகவும் விளங்கியவர்.

இவர் இதுவரை சுமார் 8 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கலாபூஷணம், நகைச்சுவை மன்னன், நகைச்சுவை ரன், வில்லிசை வேந்தன், கதைக் கொண்டல், இலக்கிய முதுமாணி, கதைமாமணி, பல்கலைக் கலைஞன், நடிகமன்னன் போன்ற பல உயர் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4.00 மணிக்கு கல்லடி உப்போடை பொது மயானத்தில் இடம்பெறுகின்றது.

# மண்டூர் வயல்வெளியில் ஆசிரியர் சடலமாக மீட்பு

(க.கிருபாகரன்)

வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தின் வயல்வெளியிலிருந்து பூபாலபிள்ளை சசிகரன் (வயது 48) என்ற ஆசிரியர் செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டார் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

சம்பவ தினமான நேற்று முன்தினம் பாடசாலை விடுமுறை என்பதால், மதிய போசன உணவினை உண்டு விட்டு, தனது வயலினைப் பார்வையிடுவதற்காக இவர் சென்றுள்ளார். அவர் சென்று பல மணி நேரமாகியும் வீடு திரும்பாமையால் வீட்டிலுள்ளோர் கவலையடைந்த நிலையில் காணப்பட்டுள்ளனர். இதன்போது அங்கு வருகை தந்த நபரொருவர் உங்கள் கணவர் வயல் பகுதியில் மரணமடைந்த நிலையில் காணப்படுகிறார் எனப் தெரிவித்தார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது மரணித்தவரின் மனைவி குறிப்பிட்டார்.

இதனையடுத்து களுவாஞ்சிகுடி நீதிவானின் உத்தரவுக்கமைய மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைச் சென்று பார்வையிட்டமையுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# எப்போதும் மக்களுக்காக போராடிய மருத்துவபீட பேராசிரியர் பாலகுமார்

## இன்று அவரது 31 ஆவது நினைவு நாள்






அண்மையில் இயற்கை எய்திய மருத்துவபீட உயிர் இரசாயனவியல் பேராசிரியர் பாலகுமார் சந்திரசேகரம்பிள்ளை 1959 ஆம் ஆண்டில் வடமராட்சியில் உள்ள நவிண்டில் என்னும் கிராமத்தில் சைவ குலத்தில் மூத்த மகனாக பிறந்தார். நண்பர்களினால் பாலா என்று அன்பாக அழைக்கப்பட்ட இவருக்கு ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் இருக்கிறார்கள். எட்டாம் வகுப்பில் இருந்து தனது கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தொடர்ந்த இவர் என்னை முதன்முதல் சந்தித்தபோது மிகவும் எளிமையாக, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயிரியல் ஆசிரியராக கடமையாற்றிய என்னுடைய தந்தையார் கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதனின் மாணவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நான் மருத்துவப் பட்டதாரியாக யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறி பல வருடங்களின் பின்னரேயே அவர் மருத்துவபீடத்தில் இணைந்து கொண்டதால் அவரைப் பற்றி ஆரம்பகாலத்தில் அறியும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும். – குறள்: 785**

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை; ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும் என்று திருவள்ளுவர் கூறியது போல் இவரது நட்பு எனக்கு எதிர்பாராதவிதமாக 2015 ஆம் ஆண்டு கிடைத்தது. அந்த நேரத்தில் வலிகாமத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் சுன்னாகம் தனியார் மின் பிறப்பாக்கியில் இருந்து வெளிப்பட்ட ஒயில் கழிவுகள் குடிநீரில் கலந்தமையால் பாதிக் கப்பட்டு இருந்தனர். இந்த மாபெரும் சுற்றுச்சூழல் அழிவுக்கு எதிராக யாழ் மருத்துவ சங்கத்தின் தலைவராகவும் சமுதாய மருத்துவ நிபுணராகவும் நான் சில சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் போராட வேண்டியிருந்தது. உண்மையில் இந்த அநியாயத்துக்கு எதிராக போராடி இருக்க வேண்டிய வடமாகாண சுற்றுச்சூழல் அமைச்சர் ஐங்கரநேசன் அந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களைப் பாதுகாப்பதை விடுத்து குற்றம் சாட்டப்பட்ட தனியார் மின்சார கம்பனியின் பெயரை பாதுகாப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுத்துக் கொண்டமையுடன் பொதுமக்களே தமது கிணறுகளில் ஒயில் ஊற்றி பொய்க் குற்றச்சாட்டுகளை தெரிவிக்கின்றனர் எனக் கூறி இருந்தார். மேலும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் இளைப்பாறிய மருத்துவ நிர்வாகி ஒருவரையும் இணைத்து ஒரு நிபுணர் குழுவை அமைத்து அவர்கள் மூலமாக வலிகாமம் நீர் மாசுபடவில்லை என்று பொய்யான கருத்தைப் பரப்பி வந்தார்.

இத்தகைய இக்கட்டான நேரத்தில் அப்போது மருத்துவ பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் பாலகுமார் மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு வலிகாமம் குடிநீரில் ஒயில் கலந்து இருக்கும் உண்மை நிலையை உறுதி செய்து கொண்டார். அதை தொடர்ந்து என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி அப்பாவி மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநியாயத்துக்கு எதிராக தோளோடு தோள் நின்று போராட முன்வந்தார்.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையிட்டு கவலை அடைந்திருந்த பேராசிரியர் பாலகுமார் அதில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக ஒரு நீர் சுத்திகரிப்பு வடிகட்டி ஒன்றை அமைக்கும் ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார். அவருடைய அந்த ஆய்வு முயற்சி முழுமையாக வெற்றி அளிக்காத போதிலும் அரசியல்வாதிகள், பேராசிரியர்கள், மருத்துவர்கள் என்று ஒரு பெரிய கும்பல் பல்தேசிய கம்பனியினால் வாங்கப்பட்டு அதை ஆதரிக்கும் நிலையில், நேர்மையாக ஒருவருக்கும் பயப்படாமல் எம்முடன் இணைந்து அவர் போராடியமை மிகவும் போற்றத்தக்கதாக அமைந்தது. இறுதியாக உச்ச நீதிமன்றத்தில் நீர் மாசடைதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் தீர்ப்பு வழங்கப்பட்டதிலும் பேராசிரியர் பாலகுமாரின் பங்களிப்பும் இருந்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

வழமையாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் மூன்று முக்கிய பணிகளில் ஈடுபடுவார்கள்:–

1. மாணவர்களுக்கு கற்பித்தல்
2. ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
3. பல்கலைக்கழக நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளுதல்.

பேராசிரியர் பாலகுமார் இவை மூன்றிலும் சிறந்து விளங்கினார்.

முதலாவதாக மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிப்பது மாத்திரமல்லாமல் உரிய ஆலோசனைகளையும் வழங்கி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானவராக இருந்தார்.

இரண்டாவதாக, பல ஆய்வுகளை மேற்கொண்டு PhD கலாநிதி பட்டம் பெற்றுக்கொண்டமை மட்டுமல்லாமல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்று இருந்தார்.

மூன்றாவதாக, பல்கலைக்கழக நிர்வாகத்தில் உயிர் இரசாயனவியல் துறைத் தலைவராக இருந்தது மாத்திரமல்லாமல் அரசியல் தலையீடு அற்ற உச்சநிலையாகிய மருத்துவ பீடாதிபதியாக செயல்பட்டிருந்தார்.

அத்துடன் அரசியல்வாதிகளைப் பந்தம் பிடித்து உபவேந்தராக வர அவர் முயற்சி செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நான்காவதாக சமூக பொறுப்புடன் பொது மக்களின் நலனில் தீவிர அக்கறை கொண்டிருந்தார். இதை அவர் வலிகாமம் மக்களுக்காக போராடிய காலத்தில் அவரது கைப்பட எழுதிய கடிதத்தில் காணமுடியும். அதீத நேர்மையாளராக இருந்தமையுடன் புலம்பெயர் சமூகத்தின் நிதி உதவிகள் முறையான விதத்தில் பயன்படுகின்றன என்பதை பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவர் வகித்த பதவிகளில் உறுதி செய்திருந்தார்.

மக்களுக்காக உறுதியாக போராடிய மாமனிதர், இளமைத் தோற்றத்துடன் கூடிய பேராசிரியர் பாலகுமார் 13.4.2022 அவருடைய 63 வயதில் பூவுலகைப் பிரிந்தபோது அதை என்னால் நம்ப முடியாமல் இருந்தது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்றும் அதைவிட பல சைவக் கோவில்களின் நிர்வாக சபைகளில் கடமையாற்றி மகேசன் சேவையிலும் முன்னணியில் இருந்த அன்னாருடைய ஆத்மா சிவலோக முத்தி பெற்றிருக்கும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

– மருத்துவ கலாநிதி முரளி வல்லிபுரநாதன் –
(சமுதாய மருத்துவ நிபுணர், சுகாதார அமைச்சு;
யாழ் மருத்துவச் சங்கத் தலைவர் – 2014/15)



# இன முறுகலைத் தூண்டியமை முட்டாள்தனமான செயற்பாடே!

## செல்வம் எம்.பி. காட்டம்



மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் விட்டுச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை ராஜினாமா செய்வது என்பது முட்டாள்தனம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது. சிங்கள தேசத்தில் போராட்ட வடிவில் பல விடயங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆரம்ப பிரச்சினையே இன்று பாரிய அளவில் வெடித்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினை பின்தங்கிய நிலையிலே இவ்வாறான ஒரு சூழலை உருவாக்கி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவருடைய அரசாங்கம் மிக மோசமான ஒரு சூழலை உருவாக்கி உள்ளது என்பதைப் பார்க்கும் போது இது ஒரு கண்டனத்திற்குரிய விடயமாக உள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

எங்களுடைய பங்களிப்பு குறித்த விடயங்களில் இருக்கின்ற போது விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி திசை திருப்புகின்ற கெட்டித்தனம் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி சிங்கள மக்களைத் திசை திருப்புகின்ற ஒரு நிலையை அவர்கள் ஏற்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்கக் கூடாது. காலச்சக்கரம் சுழன்று கொண்டு இருப்பதை பார்க்கின்ற போது இந்த மே மாதத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தார்கள். உயிர் அவலம் ஏற்பட்டது.

மே–18 இல் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட முடியாத நிலையில், அனாதையாக கைவிடப்பட்டது. தனது தந்தை உறவுகள் உயிரிழந்து சடலமாக கிடக்கும் போது அதனை தாண்டி வருகின்ற அவலமான சூழ்நிலை ஏற்பட்டது. மே மாதம் என்பது எமது மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றது.

எங்களுடைய மக்களுக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு எதிராக இந்த மே மாதத்தில் நிலைமைகள் மாறி இருப்பது கவலை தருகின்ற விடயமாக இருந்தாலும், இறைவன் ஒரு நியாயமான செயல்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்று நாங்கள் கருத முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சிங்கள மக்களால் ஆதரிக்கப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் இன்று இந்த மக்களாலேயே துரத்தப்பட்டு பழிவாங்கப்படுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் உள்ளிட்ட எமது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இறைவனின் நாட்டம் எம் மக்களுடன் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

எனவே தமிழர்களாகிய நாங்கள் முழுமையாக குறித்த போராட்டங்களில் இணைந்து கொண்டிருந்தோம் என்றால் இந்த அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் குறித்த போராட்டத்தை எமது பக்கம் திசை திருப்பி விடுதலைப்புலிகளின் மீளாக்கம் அல்லது விடுதலைப்புலிகள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள் என்று கூறுகின்ற ஒரு நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தி எங்களுக்கு எதிராக ஒரு வன்முறையை தூண்டி விடுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இக்காலகட்டத்தில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஊரடங்குச்சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில் நாடு முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அன்றாடம் உழைத்து உண்ணுகின்ற மக்கள் தற்போதைய சூழலில் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் எரிவாயு, எரிபொருள்கள் இல்லை. இதனால் விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் ஏனைய கூலி தொழிலாளர்கள் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே தலைவர்கள் நிதானமாக ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்றபோது அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அந்த சூழ்நிலையில் அந்த விடயத்தை அவர்கள் கையாண்டு இருந்தார்கள் என்றால் இன்று இந்த தலைவர்கள் மக்களினால் மதிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்களின் இறுமாப்பு மற்றும் ஆயுதப்போராட்டத்தை எவ்வாறு அடக்கி விட்டோம் என்றது போல் சிங்கள மக்களின் இந்த போராட்டத்தையும் அடக்கலாம் என்று கற்பனையுடன் அவர்கள் செயற்பட்டுள்ளனர். அது இன்று வினையாக மாறியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு. மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் விட்டுச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை ராஜினாமா செய்வது என்பது முட்டாள்தனம். மக்கள் இன்றும் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர்–என தெரிவித்தார்,

# மீனவர்களுக்கு கடலில் அனர்த்தம் ஏற்பட்டால் மீட்பு நடவடிக்கைக்குகூட எரிபொருள் இல்லை!

## கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனம் வேதனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.11

கடலிலே அனர்த்தம் ஏற்பட்டால் உடனடியாக சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குக்கூட எரிபொருள் இல்லாத நிலைமையே காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் வின்சன் டிப்போல் அருள்நாதன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் தொழிலிற்குச் செல்வதற்கு சீரான எரிபொருள் விநியோகம் கிடையாது. சீரான எரிபொருள் இன்மையால் தற்போது வாரத்துக்கு இரு நாள்கள் மட்டுமே தொழிலுக்குச் செல்லும் நிலைமையில் கடற்றொழிலாளர் குடும்பம் பெற்ற கடனை செலுத்த முடியாமலும் உணவு இல்லையெனக் கூற முடியாத அவமானத்திலும் கூனிக் குறுகி நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கும் அப்பால் தொழிலாளர்களோ அல்லது சுற்றுலாப் பயணிகளோ அல்லது வேறு வகையிலோ கடலிலே ஓர் அனர்த்தம் நிகழ்ந்தால் படகுகளும் தொழிலாளர்களும் உடனடியாகவே தயாராகி மீட்புப் பணிக்குச் செல்ல முடியும். ஆனாலும் எரிபொருள் கிடையாது.

இந்த நிலைமைக்கு நல்ல உதாரணம் 2022-05-10 அன்று செம்மலையில் கடலில் அடித்துச் செல்லப்பட்ட 3 சகோதரர்கள் தொடர்பான தகவல் 3 மணியளவில் கிடைத்தபோது மறுநாள் தொழிலிற்காக எரிபொருள் வைத்திருந்த தொழிலாளிகள் பலர் உடனடியாக எடுத்து வந்து தேடுதலில் ஈடுபட்டனர். இருந்தபோதும் மேலும் ஒரு 15 படகிற்கு எரிபொருள் கைவசம் இருந்திருப்பின் சற்று அதிகமாகவே முயற்சித்திருக்க முடியும்.

இந்த நிலைமையில் நேற்று (புதன்கிழமை) அதிகாலையில் இருந்து பல இடங்களிற்கும் அலைந்து திருந்து இறுதியில் முல்லைத்தீவு ப.தோ.கூ.சங்கத்தில் எரிபொருளைப் பெற்றே 25 படகுகளில் தேடுதலில் ஈடுபட முடிந்தன. இவற்றை திணைக்களத்திற்கோ மாவட்ட அரச அதிபருக்கோ ஏன் கடற்றொழில் அமைச்சருக்கோ சொன்னால் புரிவது கிடையாது.

இவ்வாறான நிலைப்பாட்டை உணர்ந்து மீனவர்களுக்கான சீரான எரிபொருள் அல்லது குறிப்பிட்ட அளவு அனர்த்த சேவைக்கான இருப்பை வழங்க உரியவர்கள் ஆவண செய்ய வேண்டும்.

இதேநேரம் மாவட்ட மீனவர்களை நாயாறு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என 3 வலயங்களாக பிரித்து எரிபொருள் விநியோக அட்டையை அங்கத்தவர்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். அதனூடாக எரிபொருள் நிலையங்கள் ஊடாக எரிபொருள் விநியோகம் இடம்பெற முடியும். முல்லைத்தீவில் 825 அங்கத்தவரும், நாயாறில் ஏற்கனவே 265 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது இன்னும் 300 அட்டை வழங்கப்படவுள்ளது. புதுக்குடியிருப்பில் 350 அங்கத்தவர்களுக்கும் உறுதிப்படுத்தல் அட்டை வழங்கப்பட்டபோதும் இந்த அட்டைகளுக்கு எரிபொருள் விநியோகம் 4 தினங்களுக்கு ஒருதடவை 2 ஆயிரம் ரூபாவிற்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. 2 ஆயிரம் ரூபாவிற்கு 23 லீற்றர் மண்ணெண்ணெயே கிடைக்கின்றது. இது ஒரு நாள் தொழிலுக்கே போதுமானதாக இல்லை.

இந்த நிலைமையில் நேற்று இடம்பெற்ற அனர்த்தத்துக்கு 300 லீற்றர் எண்ணெய் முல்லைத்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் மூலம் மேலதிகமாக பெற்றே தேடுதலிற்கான படகுகள் சென்றன. இருந்தபோதும் இந்த நிலைமை நீடித்தால் அனர்த்தம் ஏற்பட்டு உயிரிழந்தவர்களின் உடலைக்கூட மீட்கப்பட முடியாத தன்மையே காணப்படுகின்றது. – என்றார்.

இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

எரிபொருள் இன்மை என்பது தேசிய ரீதியில் காணப்படும் பிரச்சினையாகவே உள்ளது. அதற்கும் அப்பால் தற்போது ஊரடங்கு சட்டமும் அமுலில் உள்ள நிலைமையில் சில படிகளும் தாமதமடைகின்றது.

இதேநேரம் தற்போதைய குழப்பமான சூழலில் எரிபொருளை எடுத்து வரும் தாங்கிகளுக்கும் தீ வைக்கக்கூடும் என்ற அச்சம் காணப்படுவதால் அதற்கான பாதுகாப்பை வழங்குமாறு படையினரிடம் கோரப்பட்டுள்ளது. அந்தப் பாதுகாப்பு கிடைத்தால் எரிபொருள் எடுத்துவர நடவடிக்கை இடம்பெறுகின்றது. – என்றார்.




# நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமடையுமாம்!

## மத்தியவங்கி ஆளுநர் எச்சரிக்கை

அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவில் ஏற்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் –

இந்த நெருக்கடிகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்காவிட்டால், பதவி விலகுவேன் என்றும் கூறியுள்ளார்.

தற்போதைய நிலைமை தொடர்ந்தால், நாளாந்தம் 10 முதல் 12 மணிநேர மின்வெட்டு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தொலைக்காட்சிகள் மற்றும் குளிர்சாதனப்பெட்டிகள் போன்ற அத்தியாவசியமற்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதை மக்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான நிதிகள் பயன்படுத்தப்படுவதால் வெளிநாட்டில் உள்ளவர்கள் தங்களது வருமானத்தை உத்தியோகப்பூர்வ முறைமூலம் அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2022இல் வெளியிடப்பெற்றது.